**O.S.No. 80/2016** **நாள் : .05 .08.2022**

**PW 1 குறுக்குவிசாரணை.**

நான் வாதி பேராயத்தின் அதிபர் கிடையாது . அதிபர் சார்பாக சாட்சியம் அளிக்கிறேன். நான் பொருளார் ஆக உள்ளேன். அதிபர் பொறுப்பில் உள்ளார். வாதி அதிபர் சார்பாக நான் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு எழுத்துபூர்வமாக அதிகாரம் கொடுத்துள்ளார் என்றால் கொடுத்துள்ளார். அதற்கான அதிகார பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 14.11.2021 முதல் வாதி பேராலயத்தில் பொருளாலராக இருந்து வருகிறேன். வாதியின் வழக்குரையின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். 2 முதல் 4 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் சரிதான். வழக்கு சொத்து வேளாங்கண்ணி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களாக 5 புல எண்களை காட்டியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 5 புல எண்களுக்கும் மொத்த விஸ்தீர்ணம் என்று பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தாவா புல எண்கள் 94/1 ஏ , 95/4 ஏ, 96/2 ஏ, 113/1 ஏ, 114/1 ஏ ஆகிய புல எண்களுக்கு தனித்தனியே விஸ்தீர்ணம் எனக்கு தெரியாது. அதே போல வழக்குரையில் சொத்துவிபரத்தில் புல எண்களுக்கு தனித்தனி விஸ்தீர்ணம் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி புல எண்களுக்கு நான்கெல்லை விபரங்களும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி 5 புல எண்களும் கிரயம் சாசனம் மூலமாக கிடைக்கப்பட்டதாக கூறியுள்ளேன். எங்களது பிராதில் மேற்படி புல எண்கள் எந்தெந்த கிரயசாசனம் மூலம் எப்பொழுது வாங்கப்பட்டது என்று கூறப்படவில்லை என்றால் சரிதான். புல எண்களுக்கான கிரய சாசனத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி சொத்துக்களுக்கு முந்தைய உரிமையாளர் யார் என்ற விபரமும் பிராதில் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். பல்வேறு நபர்களிடம் வழக்கு சொத்துக்களை கிரயம் வாங்கியதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கு ஆதியில் பட்டா யார் பெருக்கு இருந்தது என்று என்னால் சொல்ல இயலாது. எங்களுடைய முந்தைய உரிமையாளர் பெயரில் பட்டா இருந்ததற்கான ஆதாரத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புல எண்.94/1 என்பது 94/1 ஏ, 1 பி, 1 சி என்று உட்பிரிவுகளாக்கப்பட்டது என்றால் சரிதான். புல எண்.95/4 என்பது 95/4 ஏ, 4 பி, 4 சி என்று உட்பிரிவுகளாக்கப்பட்டது என்றால் சரிதான். புல எண்.96/2 என்பது 96/2 ஏ, 2 பி, 2 சி என்று உட்பிரிவுகளாக்கப்பட்டது என்றால் சரிதான். புல எண். 113/1 என்பது 113/1 ஏ, 1 பி, 1 சி என்று உட்பிரிவுகளாக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புல எண்.114/1 என்பது 114/1 ஏ, 1 பி, 1 சி என்று உட்பிரிவுகளாக்கப்பட்டது என்றால் சரிதான். புல எண்.94/1 பி, 95/4 பி, 96/2 பி, 114/1 பி என்பது நிலவியல் சாலை என்று

வகைபாடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது தவறாக செய்யப்பட்டுள்ளது. புல எண்.113/1 டி என்பது சாலையாக வகைபாடு செய்யப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு சொத்துக்களுக்க உட்பிரிவுகள் ஏ,பி.சி. என்று கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வருவாய் கணக்குகளில் மேற்படி உட்பிரிவுகள் ஏ.பி.சி க்கு விஸ்தீர்ணம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துகளில் உள்ள புல எண்களுக்கு ஏன் விஸ்தீர்ணம் காட்டப்படவில்லை என்றால் தெரியாது. எங்கள் வழக்குரை சொத்து விபரத்தில் உட்பிரிவு ஏ மட்டும் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். எங்கள் வழக்குரையில் உட்பிரிவுகள் பி மற்றும் சி - க்கு வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி புல எண்களில் 113/1 பி தவிர இதர பி உட்பிரிவுகள் அனைத்தும் சாலையாக புல வரைபடத்தில காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே போல புல எண்.113/1 டி-யும் சாலையாக காட்டப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி தெரியாது. சாலையாக உட்பிரிவு செய்து காட்டப்பட்து எந்த வருடம் என்றால் எனக்கு தெரியாது. மேற்கண்ட உட்பிரிவுக்கு முன்பாக பழைய புல எண்கள். 94, 95, 96, 113 , 114 என்றால் சரிதான். பழைய புல எண்களுக்கு எங்கள் பேராலயத்தின் பெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான். மேற்படி 5 பழைய புல எண்களும் அரசுக்கு சொந்தமான தரிசு புறம்போக்காக இருந்தது என்றால் இல்லை. மேற்படி புல எண்களில் பல நபர்கள் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். அதில் இந்துக்கள், முஸ்லீம்கள், கிருஸ்துவர்கள் குடியிருந்து வந்தார்கள் என்றால் இருக்கலாம். மேற்படி தாவா சொத்துக்கள் என்பது பேருந்து நிலையம் செல்லும் சாலைக்கு வெள்ளாற்றிற்கு இடைப்பட்ட பகுதி என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு மேற்கு புறம் முஸ்லீம் தெரு உள்ளது என்றால் சரிதான். வெள்ளறாற்றின் வடகரையிலிருந்து தாவா சொத்தின் வழியாக பேருந்துநிலையம் செல்லவதாக வரைபடம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வெள்ளாற்றின் வடகரை என்பது முஸ்லீம் தெருவின் சேர்ந்த பகுதி என்றால் கிடையாது. பேராலத்திற்கு செல்வதற்கு தாவா சொத்து பாதையை மாற்று பாதையாக பயன்படுத்தி வந்தார்கள் என்றால் இல்லை. அது நடைபாதை ஆகும். மேற்படி சொத்துக்களை அரசாங்கம் எங்களிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அது அரசாங்க சொத்து கிடையாது. அரசு நில உடைமை மேம்பாட்டு திட்டம் எப்பொழுது வந்தது தெரியுமா என்றால் சரியாக நினைவில்லை 1983 என்று நினைக்கிறேன். அதற்கு முன்பாக தாவா சொத்துகளுக்கு பட்டா யார் பெயரில் இருந்து என்றால் தெரியாது. வா.சா.ஆ-1 யு.டி,ஆர்-ன் படி கொடுக்கப்பட்ட பட்டா என்றால் சரிதான். இதை தவிர தாவா சொத்துக்கள் எங்களுக்கு உரிமையானது என்பதை காட்டுவதற்கு வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் எங்கள் செல்வாக்கை பயன்படுத்தி தாவா புல எண்களுக்கு எங்கள் பெயரில் பட்டா பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலுவலர் முன்பாக 04.11.1984 ல் பிறப்பித்த

உத்தரவிற்கு நாங்கள் அப்பீல் செல்தோமா என்றால் செய்தோம். அப்பீல் மனு நகல் ஏதும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த அப்பீலில் 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பினர்கள் கிடையாது என்றால் சரிதான். மேற்படி 1984 ல் பெற்ற உத்தரவு இதுநாள் வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். 1984 க்கு பின்னர் 2016 ல் தான் அந்த உத்தரவை நடைமுறைப்படுத்தவேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி மாவட்ட வருவாய் அலுவகத்தில் பிறப்பித்த உத்தரவு எங்கள் தரப்பில் ஆவணமாக குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். மாவட்ட வருவாய் அ லுவலர் உட்பிரிவுகள் பி, சி ஆகியவற்றை சேர்த்து ஏ என்று உத்தரவு போட்டது தவறு என்றும் அவ்வாறு போட்ட உத்தரவு தவறு என்றும் சொன்னால் சரியல்ல. யூ.டி.ஆரில் எங்களுக்கு கொடுத்த அசல் பட்டா எங்களிடம் உள்ளது. அந்த அசல் பட்டாவை வழக்கில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் அவசியம் இல்லாததால் தாக்கல் செய்யவில்லை. 1984 யு.டி.ஆர் பட்டா கொடுக்கும்போது தாவா சொத்துக்கள் உட்பிரிவு செய்யப்பட்டு சாலையாக காட்டப்பட்ட விரபம் தெரியும் என்றால் தெரியும். அந்த யு.டி.ஆர் பட்டாவின் மேல் விஸ்தீர்ணம் , நான்கெல்லையில் ஆட்சேபணை இருந்தால் 30 நாட்களுக்குள் செட்டில்மெண்ட் அதிகாரியிடம் அப்பீல் செய்து கொள்ளலாம் என்ற விபரம் இருக்கும் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி யு.டி.ஆர் பட்டாவிற்கு நாங்கள் எந்த அதிகாரியிடம் மேல் முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கும் சர்வே பவுண்ட்ரி சட்டபடி தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வருவாய் அதிகாரி போட்ட உத்தரவினை செயல்படுத்த வேண்டும் என்று சிவில் நீதிமன்றத்தில் பரிகாரம் கோரமுடியாது என்றால் சரியல்ல. பட்டா பாஸ்புத்தகம் சட்டத்தின் படி சிவில் நீதிமன்றத்தின் அதிகாரம் நீக்கரவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தூய பட்டாவிற்கு முன்பே தாவா புல எண்கள் சொத்துகளில் Detailed பாதை இருந்தது என்றால் இல்லை. 1974 வருடத்தில் தயார் செய்யப்பட்ட ரீ செட்டில்மெண்ட் அளவீட்டின் படி செய்யப்பட்ட புல வரைபடத்தில் புல எண்கள் 90, 107 , 95 , 96 , 113 , 114 , ஆகி யபுல எண்களில் Detailed பாதை இருப்பதாக குறிப்பிடப்பட்டது என்றால் இல்லை. குமரவேல் என்பவர் சில நபர்கள் தாவா பாதையை ஆக்கிரமம் செய்துள்ளார் என்று அதை அகற்ற வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை விபரம் எங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். அதில் நாங்கள் தரப்பினர்கள் கிடையாது. ரிட் உத்தரவின் பெயரில் கீழ்வேளுர் வட்டாட்சியர் எங்களையும், பொது மக்களையும் அழைத்து அமைதி கூட்டம் நடத்தினார் என்றால் இல்லை. அசல் வழக்கு எண்.79/ 89 வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பினர்கள் கிடையாது என்றால் சரிதான். அந்த வழக்கில் நாங்கள் சமாதானம் செய்து கொள்ளவில்லை. ஜோசப் என்பவர் எங்கள் பேராலயத்தில் பணிபுரிந்து வருபவர் அவர் பெயரில் ஒரு வழக்கை தாக்கல் செய்து ஒப்புறவாக ஒரு தீரப்பை பெற்றுள்ளோம் என்றால்

சரியல்ல. இதே பாதை சம்மந்தமாக இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.200/1986 என்ற வழக்கு நடந்தது என்றால் சரிதான். அதில் பொது பாதை இல்லை. நடைபாதை என்று சமரசம் மூலம் தீர்ப்பாணை செய்யப்பட்டது. அந்த தீர்ப்பில் திருவிழாவிற்கு வருபவர்கள் நடைபாதையை பயன்படுத்தி கொள்ளாலம் என்று உள்ளது. அந்த நடைபாதையில் முஸ்லீம் தெருவாசிகள் நடக்ககூடாது என்று உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ- 8 ஆவணம் அசல் வழக்கு எண்.200/1986 ல் பிராது நகல் என்றால் சரிதான். வா.சா.ஆ-9 என்பது மேற்படி வழக்கு எண்.200/1986 ன் எதிர்வழக்குரை நகல் என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் பத்தி 3 ல் தாவா சாலை என்பது பட்டா சாலை என்றும் அது தாவா புல எண்களில் உள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தாவாப்பாதையை தெருவாசிகள் பயன்படுத்திவந்தார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாதையை 1977 க்கு பின்னர் அமைக்கப்பட்டதா சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். முஸ்லீம் நகரை ஒட்டி அன்னை நகர் உள்ளது என்றால் சரிதான். அதில் அன்னை நகரில் எவ்வளவு நபர்கள் குடியிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது, தற்போது யாரும் இல்லை. தற்பொழுது தாக்கல் செய்துள்ள வழக்கு தாவா சொத்துகளில் நடைபாதை இல்லை என்று கூறிதான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

( வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது )